# யூலை- 20 - வியாழன்

### புனித அப்பொலினாரியுஸ்

### "என் நுகம் அழுத்தாது என் சுமை எளிதாயுள்ளது" (மத்.11:30)

## முதல் வாசகம் : விடுதலைப் பயணம் 3 : 13 - 20

மோசே கடவுளிடம், "இதோ! இஸ்ரயேல் மக்களிடம் சென்று உங்கள் மூதாதையரின் கடவுள் என்னை உங்களிடம் அனுப்பியுள்ளார் என்று நான் சொல்ல, "அவர் பெயர் என்ன?" என்று அவர்கள் என்னை வினவினால், அவர்களுக்கு என்ன சொல்வேன்?" என்று கேட்டார்.கடவுள் மோசேயை நோக்கி, "இருக்கின்றவராக இருக்கின்றவர் நானே" என்றார். மேலும் அவர், "நீ இஸ்ரயேல் மக்களிடம், "இருக்கின்றவர் நானே" என்பவர் என்னை உங்களிடம் அனுப்பினார் என்று சொல்" என்றார்.கடவுள் மீண்டும் மோசேயை நோக்கிப் பின்வருமாறு கூறினார் "நீ இஸ்ரயேல் மக்களிடம், "உங்கள் மூதாதையரின் கடவுளாகிய ஆண்டவர்-ஆபிரகாமின் கடவுள்,ஈசாக்கின் கடவுள், யாக்கோபின் கடவுள்-என்னை உங்களிடம் அனுப்பியுள்ளார்" என்று சொல். இதுவே என்றென்றும் என்பெயர் தலைமுறை தலைமுறையாக என் நினைவுச் சின்னமும் இதுவே!போ. இஸ்ரயேலின் பெரியோர்களை ஒன்றுதிரட்டி அவர்களை நோக்கி, "உங்கள் மூதாதையரின் கடவுளாகிய ஆண்டவர்-ஆபிரகாமின் கடவுள், யாக்கோபின் கடவுள்-எனக்குக் காட்சியளித்து இவ்வாறு கூறினார் உங்களையும், எகிப்தில் உங்களுக்கு நேரிட்டதையும் நான் கண்ணாலே கண்டுகொண்டேன்.எகிப்தின் கொடுமையிலிருந்து கானானியர், இத்தியர், எமோரியர், பெரிசியர், இவ்வியர், எபூசியர் வாழும் நாட்டிற்கு-பாலும், தேனும் பொழியும் நாட்டிற்கு-உங்களை நடத்திச் செல்வேன்" என்று அறிவிப்பாய்.அவர்கள் நீ சொல்வதைக் கேட்பர். நீயும் இஸ்ரயேலின் பெரியோர்களும் எகிப்திய மன்னனிடம் செல்லுங்கள். அவனை நோக்கி, "எபிரேயரின் கடவுளாகிய ஆண்டவர் எங்களைச் சந்தித்தார். இப்போதே நாங்கள் பாலை நிலத்தில் மூன்றுநாள் வழிப்பயணம் போக இசைவு தாரும். ஏனெனில், எங்கள் கடவுளாகிய ஆண்டவருக்குப் பலிசெலுத்த வேண்டும் என்று சொல்லுங்கள்.கைவன்மையை கண்டாலன்றி, எகிப்திய மன்னன் உங்களைப் போக விடமாட்டான் என்பது எனக்குத் தெரியும்.எனவே என் கையை ஓங்குவேன். நான் செய்யப்போகும் அனைத்து அருஞ்செயல்களாலும் எகிப்தினைத் தண்டிப்பேன். அதற்குப் பின் அவன் உங்களை அனுப்பிவிடுவான்.

**பதில்பாடல் :** ஆண்டவர் தம் உடன்படிக்கையை என்றென்றும் நினைவில் கொள்கிறார்

## நற்செய்தி : மத்தேயு 11 : 28 – 30

அக்காலத்தில் இயேசுகூறியதாவது : "பெருஞ்சுமை சுமந்து சோர்ந்திருப்பவர்களே, எல்லாரும் என்னிடம் வாருங்கள், நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்.நான் கனிவும் மனத்தாழ்மையும் உடையவன். ஆகவே என் நுகத்தை உங்கள்மேல் ஏற்றுக்கொண்டு என்னிடம் கற்றுக்கொள்ளுங்கள். அப்பொழுது உங்கள் உள்ளத்திற்கு இளைப்பாறுதல் கிடைக்கும்.ஆம், என் நுகம் அழுத்தாது. என் சுமை எளிதாயுள்ளது" என்றார்

**தியானம்:** முதல் வாசகத்தில் கடவுள் தாம் யாரென்பதை மிகத் தெளிவாக வெளிப்படுத்தியிருக்கின்றார். அன்பும், பண்பும் உடையவரான நம் பரலோக தந்தை தம்மில் முழு நம்பிக்கை வைக்க எம்மை அழைக்கின்றார். நற்செய்தியில் இயேசுவும் அதே அன்பை பிரதிபலிப்பவராக சுமை சுமைந்து சோர்ந்திருப்போரே எல்லோரும் என்னிடம் வாருங்கள் என்று அழைக்கின்றார். நாம் எமது பாவங்களினால் பலவகையான சுமைகளைத் தேடிக்கொள்கின்றோம். அவற்றிலிருந்து விடபட முடியாதவர்களாக அலைந்து திரிகின்றோம். சுமையானது நம்மை அழுத்தும் பொழுது நாம் என்ன செய்ய வேண்டும் என்பதை இன்றைய வாசகங்கள் தெளிவுபடுத்துகின்றன. நாம் நமது மனித பலத்தை நம்புவதைவிட்டு இறைவனின் பலத்தில் நம்பிக்கை கொள்வோம். ஏனெனில் இவ்வுலகில் யாரும் தரமுடியாத விடுதலையை இறைவன் தரக் காத்திருக்கின்றார். அவருக்கு எதிராக எமது சிந்தனையாலும், சொல்லாலும் அளவிட முடியாத சுமைகளை சேர்த்துவைத்துள்ளோம். எனவே நாம் எமது சுமைகளை அவர்பாதம் இறக்கி வைப்போம். அன்பின் தேவன் கொடுக்கும் மன அமைதியை இளைப்பாற்றியை பெற்றுக்கொள்வோம்.